# சார்பு நீதிமன்றம், சீர்காழி.

**அசல் வழக்கு எண்.** 342/2022

பெயர் : சுதா (PW1)

த/க/பெ. : ரவி

தேதி : 07.03.2024

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**குறுக்கு விசாரணை**

3 சர்வே எண் சொத்துகளுக்காக வழக்கு போட்டுள்ளேன். 517/9,, 11,33 9 ல் 389 சதுரமீட்டர், 33 ல் 350 சதுர மீட்டர், 11 ல் 594 சதுர மீட்டர். சொத்துக்கு வடபுறம் ரோடு உள்ளது. ரோட்டை தவிர்த்து மற்ற சர்வே எண்களும் சொல்லியுள்ளேன் என்றால் அது வழக்கறிஞருக்குதான் தெரியும். 517/6,7,8,10 ஒரு பக்கம் எல்லையாக உள்ளதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. பிராதில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லை புல எண். சொத்திற்கு உரிமையாளர் யார் என்பது தெரியாது. 2 முதல் 4 பிரதிவாதிகள் ஜெயங்சங்கரின் தம்பிகள் என்றால்சரிதான். அசல் வழக்கு எண்.211/19 சீர்காழி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஜெய்சங்கருக்கு எதிராக தாக்கல் செய்துள்ளேன் என்றால்சரிதான். என்னிடம் காட்டப்படுவதுதான் அசல்வழக்கு எண்.,211/19 பிராது சார்வு நகல் என்றால் சரிதான். அது **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த வழக்கு என்னிடமிருந்து சொத்தை அபகரிக்கக்கூடாது என்பதற்காக போட்டுள்ளேன். அசல் வழக்கு எண்.211/19 வழக்கம் ஜெய்சங்கர் சொத்தை அபகரிக்கக்கூடாது என்பதற்காக போட்டுள்ளேன் என்றால்சரிதான். அந்த வழக்கின் விவரங்களை இந்த வழக்கில் சொல்லவில்லை. அசல் வழக்கு எண்.211/19 வழக்கு என்ன நிலையில் உள்ளது என்பது எனக்கு தெரியாது. வழக்கறிஞருக்குதான்தெரியும். அந்த வழக்கு நான் ஆஜராகமையால் தள்ளுபடி ஆகிவிட்டது என்றால் எனக்கு தெரியாது. நான்இருப்பது பெருந்தோட்டம் கீழத்தெரு என்றால்சரிதான். 1,2 பிரதிவாதிகள்அதே தெருவில்தான் இருக்கிறார்கள் என்றால் முதல் பிரதிவாதிமட்டும்தான் இருக்கிறார். 2 ம்பிரதிவாதி வேறு தெருவில்வசிக்கிறார் தெரு பெயர் தெரியவில்லை. 3 ம்பிரதிவாதி அக்ரஹாரதெருவில்இருக்கிறார் என்றால் சரிதான். 4 ம்பிரதிவாதி வசிக்கும் தெரு தெரியாது ஆனால் என் வீட்டை தாண்டி வசிப்பது தெரியும். தாவா சொத்து என் கணவர்எழுதிவைத்த செட்டில்மெண்ட்மூலமாக கிடைத்தாக சொல்லியுள்ளேன் என்றால்சரிதான். என் கணவருக்கு சொத்து எப்படி கிடைத்தது என்பதை பிராதில் சொல்லவில்லை. அந்த விவரத்தை செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொல்லியுள்ளோமா என்றால் பட்டாபடி கிடைத்ததாக சொல்லியுள்ளோம். அசல்

செட்டில்மெண்ட் ஆவணம் அடமானத்தில் இருப்பதாக வழக்கில் சொல்லியுள்ளேன். அடமானம் பதிவு செய்யப்படவில்லை. யாரிடம்அடமானம் வைத்துள்ளோம் என்பதை பிராதில் சொல்லவில்லை. சொத்தை குறைந்த விலைக்கு பிரதிவாதிகள் கேட்டார்கள். எவ்வளவு ரூபாய்க்குகேட்டார்கள் என்பது தற்போது நினைவு இல்லை. 2019 ல் கேட்டார்கள் மாதம் நினைவு இல்லை. இதே காரணத்தின்அடிப்படையில் அசல் வழக்கு 211/19 போட்டுள்ளேன் என்றால்சரிதான். இந்த சொத்து காலிமனையாகவோ அல்லது வீடு உள்ளதாகவோ பிராதில்சொல்லவில்லை. இந்த சொத்துக்களில் ஏதாவது பயிர் செய்ததாக எதுவும் சொல்லவில்லை. இந்த சொத்துக்கு எந்த தேதியில் பட்டா என் கணவருக்கு கிடைத்தது என்பதை வழக்கில் சொல்லவில்லை. எத்தனை ஆண்டுகளாக இந்த வழக்கு சொத்துக்கள் எங்கள் அனுபவத்தில் இருந்துவருவதாக வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அசல் வழக்கு எண்.211/2019 வழக்கிலும் எத்தனை ஆண்டுகள் அனுபவம் என்பது சொல்லியுள்ளேனா என்பது தெரியவில்லை. என்னிடம்காட்டப்படும் புகைப்படத்தில் சொத்திற்கு பின்புறம்தான் வழக்குசொத்து உள்ளது என்றால் சரிதான- அநத புகைப்படம் **பி-வா-சா-ஆ 2** வழக்கு சொத்தில்முதல்பிரதவிாதி வீடு கட்டியிருக்கிறார் என்றாலும் வழக்கிற்காக இல்லைஎன்று சொல்லுகிறேன் என்றால்சரியல்ல. வழக்கு சொத்திற்கு 2 முதல்4 பிரதிவாதிகளின் சகோதரர் ஜெய்சங்கருக்கு உரிமையானது என்றாலும் அதில் எந்த காலத்திலும் உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. என் கணவருக்கு குடியிருப்பு அடிப்படையிலா அல்லது ஆவணங்களின் அடிப்படையில் பட்டா வழங்கப்பட்டதா என்றால் நத்தம் காலி என்று பட்டா வழங்கப்பட்டது. நத்தம்காலிமனை என்பது காலி இடம்என்பதால்அதற்கு பட்டா வழங்க அரசு அதிகாரிகளுக்கே உரிமை இல்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கு முறைப்படி பட்டா வழங்கப்படவில்லை என்றாலும் வா.சா.ஆ.2 பட்டாமாறுதல்உத்தரவின்மூலம் என் கணவர் பெயரில் பட்டா மாறுதல் ஏற்பட்டது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.2,3 ஆவணங்கள் செல்லக்கூடியதல்ல என்றால்சரியல்ல. எங்கள் செல்வாக்கின்அடிப்படையில் அரசு அதிகாரிகளை ஏமாற்றி பெறப்பட்ட 3 முதல் 4 செல்லக்கூடியவையல்ல என்றால்சரியல்ல. என் கணவருக்கு வழக்கு சொத்துக்களில் உரிமைமூலம் இல்லாததால் அவர் எனக்கு செட்டில்மெண்ட் எழுத இயலாது என்றால்சரியல்ல. தாவா சொத்துக்கள் குறித்து விளம்புகை பரிகாரம் கோரமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்க இயலாது என்றால்சரியல்ல. அசல்வழக்கு எண்.211/19 இந்த வழக்கும் ஒரே வழக்கு மூலத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் உரிமையியல் சட்டப்படி வழக்கு தள்ளுபடி

செய்யவேண்டும்என்றால்சரியல்ல. தூய்மையான கரத்துடன் நீதிமன்றத்தை அணுகாததால்இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால்சரியல்ல. தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் என் அனுபவத்தை காட்டக்கூடியதல்ல என்றால்சரியல்ல. ஆகையால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.